Printed Matter

**MARTHANDAM DIOCESAN BULLETIN**
For Private Circulation Only




To

BOOK POST


If Undeliveried please return to ...
**Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165**

**Santhom Press, Diocese of Marthandam** Mob : +91 94-42-469852

# Bulletin

## Diocese of Marthandam
## மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்

அக்டோபர்
04



# மலங்கரை கத்தோலிக்க இளைஞர் தினம்

மலர் 19 அக்டோபர் 2022 இதழ் 10

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 01.10.2022 | Saturday | 11-12.30 pm<br>6.00 pm | Class – Mother's Forum<br>Holy Mass | Bishop's House<br>Peruvazhikadavu |
| 02.10.2022 | Sunday | 8.30 am<br>2.30 pm | Holy Mass<br>MCYM Day | Puspagiri<br>Pinkulam |
| 03-04.10.22 | Monday<br>Tuesday | | Priest Meet | Elavuvilai |
| 05. 10.2022 | Wednesday | 5.00 pm | Holy Mass | Meenachal |
| 06 -07.10.22 | Thursday<br>Friday | | Convention | Chalakudy |
| 08.10.2022 | Saturday | 9.30 am | College Board Meeting | Bishop's House |
| 09.10.2022 | Sunday | 7.00 am<br>4.30 pm | Holy Mass & MCYM Fest<br>Holy Mass | Ananthapally<br>Kulapparai |
| 10.10. 2022 | Monday | 6.30 am | Holy Mass<br>MBA Course Inaguration | Pattam<br>Mar Ephrem College |
| 11.10.2022 | Tuesday | 10.00 am-<br>1.30 pm | Recollection | Bishop's House |
| 16.10.2022 | Sunday | | Holy Mass | Gnadasapuram |
| 17–21.10.22 | Monday<br>Friday | | Recollection for Priests | Diocese of<br>Kuzhithurai |
| 22.10.2022 | Saturday | 11.00 am | Kolping Day | MIDS |
| 23.10.2022 | Sunday | 11.00 am | Homily<br>Legion of Mary - Rosary<br>Procession | CSI Mankadu<br>Erachakulam |
| 28.10.2022 | Friday | 11.00 am<br>3.00 pm | Marriage<br>House Warming | Nagercoil<br>Ambilikonam |
| 29.10.2022 | Saturday | 10.30 am | Homily | Pacode |
| 30.10.2022 | Sunday | | Holy Mass<br>Holy Mass | Tirunelveli<br>Zeropoint |
| 31.10.2022 | Monday | | Holy Mass & Class | Catholicate Centre |



# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்

MARTHANDAM DIOCESAN BULLETIN

மலர். 19 அக்டோபர் 2022 இதழ். 10

THE MALANKARA SYRIAN CATHOLIC CHURCH

## BULLETIN OF THE DIOCESE OF MARTHANDAM

*PATRON*

*His Excellency Most Rev. Vincent Mar Paulos*

*EDITOR*

*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

*COVER DESIGN*

*Mrs. Uni Kumari B.*

*PRINTING*

*Santhom Press,*
*Marthandam*

*PUBLISHED BY*

*The Chancellor*
*Diocese of Marthandam*



இறை அருளாலும் திருஆட்சிப்பீடத்தின் இசைவாலும்
மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபையின்
மேஜர் ஆர்ச்சுபிஷப் - காதோலிக்கோஸ்
**மோறன் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்**
பாவாவிடமிருந்து நமது நிர்வாகத்திற்கு உட்பட்ட
ஆயர்கள், கோர் எப்பிஸ்கோப்பாமார்கள், ரம்பான்மார்கள்,
குருக்கள், திருத்தொண்டர்கள், துறவிகள் மற்றும் இறைமக்கள்
ஆகிய அனைவருக்கும் ஆசிகள்.

Pro.No.CPL 5/2022

**தாமாய்த் தோன்றியவரும் ஆதிமுவற்றவரும், உள்ளியல்பில் சரிநிகர் ஆனவருமாய் இருக்கிற மூவோர் இறைவனுக்குப் புகழ்.**

### 92-வது மறுவொன்றிப்பு ஆண்டுவிழாவும் சபைசங்கம நிகழ்வுகளும்

***மேதகு ஆயர்களே, மதிப்புக்குரிய கோர் எப்பிஸ்கோப்பாமார்களே, ரம்பான்மார்களே, அருட்தந்தையர்களே, திருத் தொண்டர்களே, துறவறத்தார்களே, ஆண்டவருக்குள் அன்பான இறைமக்களே,***

மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபையின் 92-வது மறுவொன்றிப்பு ஆண்டுவிழாவும் சபைசங்கம் நிகழ்வுகளும் ஒருசேர, வரக்கூடிய செப்டம்பர் 21-வது நாளன்று வெகுவிமரிசையுடன் நாம் கொண்டாட இருக்கிறோம். நம்முடைய திருச்சபை, மேலும் இரண்டு ஆயர்களை இவ்வருடம் பெற்றுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். திருச்சபையின் கியூரிய ஆயராக மேதகு ஆன்றணி மார் சில்வானோஸ் ஆண்டகையும், திருவனந்தபுரம் பேருயர் மறைமாவட்டத்தின் துணை ஆயராக மேதகு மாத்யூஸ் மார் போளிக்கார்ப்பஸ் ஆண்டகையும் திருப்பொழிவு செய்யப்பட்டுள்ளனர் என்பதில் நாம் அனைவரும் இறும்பூது எய்தி உளம்பூரிக்கின்றோம். கடவுளின் கனிவார்ந்த பரங்கருணையை எண்ணி அவருக்கு உளமார நன்றி கூறுகின்றோம்.

மேலும், திருச்சபையின் திருப்பணிகளில் நாம் நம்மை முற்றிலுமாய்த் தந்து பணி செய்யவேண்டிய தருணம் இதுவென மனப்பூர்வமாய் உணர்கின்றோம். நன்றிப்பெருக்குடன் கடவுளின் திருமுன்னால் ஒன்றிணைய இருக்கும் இவ்வொப்பற்ற தருணத்தில், மறுவொன்றிப்பு இயக்கத்தின் இன்றியமையாமையை இன்னொரு முறையும் உய்த்துணர வேண்டிய கட்டாயத்தில் நாம் அனைவரும் இருந்து கொண்டிருக்கிறோம் என்பதை நினைத்துப் பார்ப்போம். கருணைக் கடலாகிய கடவுள் இம்மறுவொன்றிப்பு இயக்கத்தை மனதார ஏற்றுக்கொண்டு நிறைவாக ஆசீர்வதித்துள்ளார் என்பதற்கு நம்முடைய திருச்சபையின் அசுர வளர்ச்சியே சாட்சி. இறையடியார் பேராயர் மார் இவானியோஸ் ஆண்டகையும் அவருடன் இருந்த வெகு சிலரும் இம்மறுவொன்றிப்பு இயக்கத்திற்குக் தொடக்கம் இட்டபொழுது கடவுள் மீதான நம்பிக்கை மட்டுமே அளப்பெரும் மூலதனமாய் இருந்தது. 1930-ல் ஏற்றிவைத்த அச்சிறு பொறியின் வெளிச்சம் இன்று அவனியெங்கும் வீசிச்சுடர்வதை அன்றாடம் நாம் கண்டுகளிக்கிறோம். இதன்மூலம், ஒருபோதும் மாறாத கடவுளின் பராமரிப்பையும் அவரது உடனிருப்பையும் அனுதினம் அனுபவித்து வருகிறோம். கடவுள் மீது உறுதியான நம்பிக்கை வைத்திருப்போர் யாராயினும், அவர்கள் மூலமாய்க் கடவுள் வியத்தகு விந்தைகளை நிகழ்த்துகிறார் என்பது இதன்மூலம் தெளிவாகிறது.

மறுவொன்றிப்பு இயக்கத்தின் மட்டிலும் கடவுள் காட்டிய கருணை எத்துணை மேலானது என்பதை எண்ணிப்பாருங்கள். உட்பூசல்களும் உள்மனப்பிளவுகளும் மலிந்து சிதறிய ஒரு சமூகத்தின் நடுவிலிருந்து மலங்கரை சபையைத் தூக்கி நிறுத்திய கடவுள், அதனை உலகளாவிய திருச்சபை என்னும் அகன்றவானில் ஒளிமல்கும் ஒரு விண்மீனாய் மின்னித் துலங்க வைத்தார். இதற்காக, இறையடியார் மார் ஈவானியோஸ் ஆண்டகையின் ஆராத விரதத்தையும் பரிபூரண ஒப்படைப்பையும் நறுமணமிக்க காணிக்கையாக ஏற்றுக்கொண்டார். ஆகவே, சண்டை சச்சரவுகள் என்னும் கொந்தளிப்பு மிக்க கடலலைகளில் சிக்கிச் சீரழியும் எவருக்கும் உறவின் நெறியைச் சுட்டிக்காட்டும் அரிய பொறுப்பை நாம் கொண்டிருக்கிறோம் என்பது தெளிவு. மலங்கரை சுறியானி



கத்தோலிக்கத் திருஅவை ‘‘ஒற்றுமையைப் பறைசாற்றும் இறைவாக்கினள்” என்னும் உண்மையை முன்னெப்போதை விடவும் இப்போது அதிகமாய் உணரக்கடமைப்பட்டுள்ளோம். சுமார் தொண்ணூறு வருடங்களாக நாம் பேணிக்காக்கும் இவ்வொற்றுமை உணர்வை மறுவொன்றிப்பின் ஆண்டுவிழாக் கொண்டாட்டங்கள் உலகிற்கு உணர்த்தட்டும் என்பதே. தனியொருவராகவோ அல்லது திருச்சபையுடன் இணைந்தோ நாம் நம்மைக் கத்தோலிக்கத் திருச்சபையின் நோக்கங்களுடன் ஐக்கியப்படுத்திக் கொள்வோமாக.

மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபை இப்பாருலகில் நிறைவேற்ற வேண்டிய அரும்பணிகள் ஏராளம். ஆகவே, நம்முடைய திருச்சபையின் கோட்பாடுகளையும் கடமைகளையும் நாம் புரிந்துகொண்டு அவற்றை நமது வாழ்க்கையின் முக்கியத் குறிக்கோளாய் வைத்து முன்னேறுவோம். உலகியல் நாட்டங்களால் குறுகிப்போன நமது எஞ்சிய சமூகத்தினரையும் கடவுளுக்கு விருப்பமான மக்களினமாய் உயர்த்த வேண்டிய கடமை நமக்கு உண்டு. இதற்கு ஆன்மீக நெறியே அன்றி வேறெதுவும் பலனளிக்காது என்பதை இறையடியார் மார் இவானியோஸ் ஆண்டகை தெள்ளத் தெளிவாக உணர்ந்திருந்தார். அவரது பாதையை அடியொற்றும் நாமும் ஆன்மீக எழுச்சியைத் தூண்டியெழுப்பும் விழா நிகழ்ச்சிகளுக்கு முன்னுரிமை அளிக்க முன்வருவோம். இவ்வருடத்தின் மறுவொன்றிப்பு ஆண்டுவிழாக் கொண்டாட்டங்கள் இத்தகைய முன்னுரிமையில்தான் கட்டமைக்கப்பட்டுள்ளன.

“நான் இறந்து விண்ணை அடைந்த பின் கத்தோலிக்க மறையைத் தழுவாத என் சகோதர சகோதரிகளுக்காக இறைவனை உறுதியாய் இறஞ்சுவேன்” எனக் கூறிச்சென்ற மார் இவானியோஸ் ஆண்டகை மேற்படி நோக்கத்தை ஈடேற்றும் வண்ணம் நமக்காக பரிந்துரைக்கட்டும். அவரது அறநெறியில் பிறழாமல் நடைபயிலும் நமது கால்களுக்கு அவரது வேண்டுதல்கள் வலுவளிக்கட்டும்.

இவ்வருடத்திய மறுவொன்றிப்பு ஆண்டுவிழாவும் சபைசங்கம நிகழ்வுகளும் திருவல்லா உயர் மறைமாவட்டத்தின் சார்பில்

திமொத்தியோஸ் நகரில் நடைபெற உள்ளது. 92-வது மறுவொன்றிப்பு ஆண்டு விழா நம்மை வரவேற்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் திருவல்லா உயர் மறைமாவட்டத்தை நான் மனதார மெச்சுகிறேன். அதன் தலைவர் மேதகு தோமஸ் மார் கூறிலோஸ் ஆண்டகையையும் அருட்தந்தையர், துறவியர், இறைமக்கள் ஆகியோரையும் நான் நன்றியுடன் நினைவு கூருகின்றேன். அங்கு நடைபெற உள்ள சிறப்புத்திருப்பலியிலும் பல்வேறு சங்கம அமர்வுகளிலும், சுவிசே, சங்கத்தின் ஜெப வழிபாடுகளிலும் நீங்கள் உங்கள் உடனிருப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். மறுவொன்றிப்பின் கொண்டாட்டங்கள் நமது உறவின் வரலாற்று சாட்சியமாய் அமையட்டும் என வாழ்த்துகிறேன். அருள் நிறைந்த இவ்விழா நிகழ்வுகளில் கலந்து கொண்டு, நிகழ்ச்சிகள் அனைத்தையும் மங்களமாக்கி வெற்றி பெறச் செய்ய வேண்டிய பொறுப்பு சபை மக்கள் அனைவருக்கும் உரியது என உணருமாறு கேட்டுக் கொள்கிறேன். கடந்த சில வருடங்களில் பெருந்தொற்றின் காரணமாக நாம் ஒன்றாகக் கூடிவரவில்லை. அதனால் ஏற்பட்ட மனச்சோர்வுகளை நீக்கும் பொருட்டு அதிகமான உற்சாகப் பெருக்குடன் இவ்வாண்டில் நாம் ஒன்றிணைவோம். இறையருள் சுரக்கும் இத்தகைய நிகழ்வுகளை மனஎழுச்சியுடன் முன்னெடுத்துச் செல்வோம்.

கடவுள் உங்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக. இறை அன்னையாகிய தூய கன்னிமரியாவினுடையவும், திருத்தூதர்களினுடையவும், குறிப்பாக நம் தந்தையாகிய மார் தோமா சீடருடையவும் வேண்டுதல்களால் இது அமைவதாக. ஆமென்.

*இவண்,*

ஆண்டவரில் உங்கள் எளிய பணியாள்,

**† மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்**
உயர் பேராயர் மலங்கரை கத்தோலிக்கத்
திருச்சபையின் காதோலிக்கோஸ்

05-09-2022



**Most Rev.Vincent Mar Paulos**
Bishop of Marthandam

Bishop's House
Marthandam
K.K.Dist 629 165

மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருஅவை

**இளையோர் தின செய்தி - 2022**

இளையோர்களுக்கான ஆயர் மாமன்ற
பணிக்குழு தலைவர்

**மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ்**

ஆண்டகை அவர்களின் செய்தி

Cir 7/2022

***மதிப்பிற்குரிய குருக்களே, இருபால் துறவிகளே எனதருமை இளையோர்களே,***

“நீ இளைஞனாய் இருப்பதால் யாரும் உன்னைத் தாழ்வாக கருதாதிருக்கட்டும். பேச்சு, நடத்தை, அன்பு, நம்பிக்கை, தூய்மை ஆகியவற்றில் நீ விசுவாசிகளுக்கு முன்மாதிரியாய் விளங்கு” (1திமொ 4:12).

ஆண்டுதோறும் புனித பிரான்சிஸ் அசிசியின் திருநாளை நெருங்கி வரும் ஞாயிறுதினத்தை இளையோர் தினமாக நம் திருஅவையில் கொண்டாடுகிறோம். திருஅவை மற்றும் சமூகம் இவற்றின் எதிர்பார்ப்பாக இருக்கும் இளையோர்களில் கவனம் செலுத்தும் பொருட்டு இந்நாள் அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டு இளையோர் தினம் அக்டோபர் மாதம் 2-ம் தேதி கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு பங்கிலும் திருப்பலி மற்றும் தகுந்த ஆன்மீக ஆற்றல்படுத்துதல் நிகழ்வுகளுடன் இந்நாள் கொண்டாடப்பட வேண்டும்.

**இளையோர்கள் : கிறிஸ்துவின் தூதறிவிக்கும் சீடர்கள்**

இளைமை வாழ்வின் வசந்த காலம். இளமை என்பது பெரும்பாலும் குழந்தைபருவத்திற்கும் வளர்நிலைக்கும் இடைப்பட்ட காலம், அதாவது ஒருவர் இளமையாக இருக்கும் காலத்தையே குறிக்கிறது. “இளையோருக்கு

உயர்வளிப்பது அவர்களது வலிமை" (நீமொ 20:29). வாழ்க்கையில் சவால்களை சந்திப்பதற்கும், புதுப்பாதைகளில் களமிறங்குவதற்குமான தனித்துவம் மிக்க துணிச்சலும் உடல் வலிமையும் நிரம்பப்பெற்றதுமான உச்சநிலையே இளமை. (Pope Francis, Young People, the Faith and Vocational discernment No 77). இளமை பருவம் என்பது மனிதன் தன்னுடைய மற்றும் அதனுடன் தொடர்புடைய பண்புகள் திறமைகள் மற்றும் சுய உணர்வுமிக்க நல்லொழுக்கமுள்ள மனச்சான்றை (Virtuous Conscience) வார்த்தெடுப்பதன் தீவிரமிக்க காலமாக புரிந்துக் கொள்ளப்படுகிறது.

இளையோர்கள் உலகளாவிய திருஅவையின் மதிப்புமிக்க அங்கத்தினர்கள் ஆவர். திருஅவை இளையோரை அன்பு செய்கிறது. இத்தகைய சிறப்பான அன்பின் காரணத்தை திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல் அவர்களின் வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. "உங்கள் இளமை உங்கள் சொந்த உடமையோ, உங்கள் தனிப்பட்ட உடமையோ அல்லது ஒரு தலைமுறையின் உடமையோ அல்ல. மாறாக, இவ்வுலகில் தன்னுடன் பயணிக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் சொந்தமான உடமையே. இது அனைவருக்கும் சொந்தமான மனுகுலத்தின் சிறப்புடமை" (Letter to the Youth of the World on the Occasion of International Youth Year, No.1). திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வார்த்தையில், இளையோர்கள் நாளையோ, இடைப்பட்ட நேரமோ அல்ல, மாறாக அவர்கள் "இப்போது"(சர்ஜ்) கடவுளுக்குடையவர்கள்(Pope Francis, Homily at the Closing Mass for the 34th World Youth day in Panama, 2019). எனவே திருஅவையின் வாழ்விலும் பணியிலும் இளையோரின் பங்கு மிக முக்கியமானது. இளையோர்கள் தங்கள் சமூகங்களில் ஆக்கபூர்வமான மின்னிலக்க கண்டுபிடிப்பாளர்களாக செயல்பட்டு இப்பிரபஞ்சத்தின் நிலையான வளர்ச்சிக்கு நேர்மறையாக பங்களிக்க ஆர்வமுள்ள சுறுசுறுப்பு மிக்க குடிமக்களாக விளங்குகின்றனர்.

தமது திட்டங்களை நிறைவேற்றகடவுள் பெரும்பாலும் இளையோர்களையே தேர்ந்தெடுத்தார். மோசே, யோசுவா, சாமுவேல், எரேமியா மற்றும் பலர் கடவுளுடைய மக்களை வழிநடத்த தங்கள் இளம் வயதிலே தேர்ந்தேடுக்கப்பட்டனர். இந்த இளம் தலைவர்கள் எப்போதும் கடவுளுக்கு கீழ்படிந்து அவர் முன்னிலையில் தங்களை தூயதாக



காத்துக்கொண்டனர். கடவுளுடைய மகனாகிய இயேசு இளையோரில் இளைஞனாகவே இருந்தார். இயேசு தனது நற்செய்திப் பணியை தொடங்கிய போது "அவருக்கு வயது ஏறக்குறைய முப்பது" (லூக் 3:23) என்று லூக்கா நற்செய்தியாளர் குறிப்பிடுகிறார். உலக மீட்பரான இயேசு கிறிஸ்து தாமே இளமைப்பருவத்தை கடந்துச் சென்றார். அவருடைய பிரசன்னத்தால் அதை தூய்மைப்படுத்தவும் செய்தார். இவ்வுலகில் வாழ்ந்த போது தமது பெற்றோருக்கு கீழ்படிதல் உள்ள குழந்தையாக இருந்தார் (லூக் 2:51). அவர் வளர்ந்து வலிமையுள்ளவர் ஆனார். அவர் ஞானத்தால் நிரப்பப்பட்டார்; கடவுளின் அருள் அவர் மேல் இருந்தது (லூக் 2:40). அவர் தன்னை தயார்ப்படுத்திக் கொண்டார் (லூக் 4:1-3). அவர் இறைவேண்டல் செய்தார் (லூக் 4:16, 6:12). அவரோடு தங்கியிருந்த சீடர்கள் அவருடைய புனிதத்தை அனுபவித்து, "நாங்கள் மெசியாவைக் கண்டோம்" (யோவா 1:41) என்று அறிவித்தார்கள்.

இயேசுவின் வாழ்வு மற்றும் போதனை இரண்டு தூய தூண்களை மையமாகக் கொண்டது. 1. இறைக்கட்டளைக்கு கீழ்படிதல், 2. வாழ்வின் புனிதம். ஆகவே, "நீங்கள் என் மீது அன்பு கொண்டிருந்தால் என் கட்டளைகளை கடைபிடிப்பீர்கள" (யோவா 14:15) என்று அவர்களுடைய சீடர்களுக்கு நினைவூட்டினார். "அவர் கட்டளைகளை கடைப்பிடிப்பதில் தான் கடவுள் அன்பு அடங்கியுள்ளது" (1 யோவா 5:3) என்று மேலும் விளக்கப்பட்டுள்ளது. "உங்கள் விண்ணக தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்" (மத் 5:48). இயேசு "தூய்மை" என்றவார்த்தை பயன்படுத்தாவிட்டாலும், லேவியர் 19:2-ன் மொழியை அவர் தெளிவாக எதிரொலிக்கின்றார். "தூயோராய் இருங்கள் ஏனெனில் உங்கள் கடவுளும் ஆண்டவருமாகிய நான் தூயவர்". தூய பேதுரு தனது முதல் திருமுகத்தில் இவ்விருநிலைகளையும் தெளிவாக எடுத்துக் கூறுகிறார். "முன்னர் அறியாமையில் இருந்த போது இச்சைகளுக்கு இசைய நடந்தது போலன்றி, கீழ்படிதல் உள்ள மக்களாய் இருங்கள். உங்களை அழைத்தவர் தூய்மையுள்ளவராய் இருப்பது போல நீங்களும் உங்கள் நடத்தையில் எல்லாம் தூய்மை உள்ளவர்களாய் இருங்கள். நீங்கள் தூயவராய் இருங்கள். ஏனெனில் நான் தூயவன்" (1பேதுரு 1:14-16). தூய பவுல் இதை இன்னொரு வடிவத்தில் குறிப்பிடுகிறார். "நீங்கள் தூயவராவதே கடவுளுடைய திருவுளம்" (1தெச 4:3).

தூய்மை திருஅவையின் கவர்ச்சிகரமான முகம். "நமது தூய்மையின் அளவுகோல் கிறிஸ்து நம்மில் உருவாகும் அளவிலிருந்து உருவாகிறது" (Gaudete Et Exsultate, சா்.21). இயேசு இளைஞர்களுக்கு இளைஞராக இருக்கிறார். மேலும் இளையோரை இறையரசுக்காக தூய்மைப்படுத்துவதில் ஒரு முன்மாதிரியாக விளங்குகிறார். மலங்கரை கத்தோலிக்க திருஅவை இருபெரும் தூண்களான கீழ்படிதல் மற்றும் தூய்மையை இயேசுவின் மாதிரியில் உள்வாங்கி மலங்கரை கத்தோலிக்க இளையோரின் அடிப்படை உருவாக்கத்தின் கருப்பொருளாக கொண்டிருக்கிறது. இந்த கருப்பொருளை மையப்படுத்தி திருமுழுக்குப்பெற்றஒவ்வொரு இளைஞனும் கிறிஸ்து சீடராக உருமாற்றம் பெறுகின்றனர்.

**மின்னிலக்க சூழல்: ஒரு வாக்குறுதியா அல்லது அழிவா?**

உலகமயமாக்கல் இவ்வுலகை ஒரு குக்கிராமமாக மாற்றியிருக்கிறது. தகவல் தொழில் நுட்பம், தொலைத்தொடர்பு மற்றும் போக்குவரத்து ஆகியவற்றின் தீவிர வளர்ச்சியின் விளைவே உலகமயமாக்கல். உலகமயமாக்கல் மூலம் மனிதர்களும் இடங்களும் ஒன்றுக்கொன்று எளிதில் இணைக்கப்படுகின்றன. இருமுனை கூரிய வாள் போன்றஉலகமயமாக்கல் ஆக்கபூர்வமான மற்றும் அழிவுகரமான முகங்களைக் கொண்டுள்ளது. பிளவுப்பட்ட மனித குலத்தை ஒன்றித்து வைப்பது, வறுமையை ஒழிப்பது, உலக அமைதியை பாதுகாப்பது, சகோதரத்துவ உலகை உருவாக்குவது போன்றவை இதன் நேர்மறையான குறிக்கோளாகும் (உரோ 8:18-23). எதிர்மறையாக, இது பணக்காரர்களுக்கும் எழைகளுக்குமிடையிலான இடைவெளியை விரிவுப்படுத்துகிறது. பொருளாதார முறை, அரசியல் கொள்கை, தத்துவயியல் கண்ணோட்டம், கலாச்சார விழுமியங்கள், ஆன்மீக நிலை போன்றவற்றிற்கு "ஒரு அளவு அனைவருக்கும் பொருந்தும்" (One size fits all) என்ற இதன் அணுகுமுறை அனைவராலும் விமர்சிக்கப்படுகிறது. மேலும் மின்னிலக்க சூழலே இன்றைய நவின உலகின் சிறப்பு இயல்பாக திகழ்கிறது. இன்றைய தலைமுறை 'Z' தலைமுறை என்று அழைக்கப்படுகிறது. 'Z' தலைமுறை மின்னிலக்க சூழலின் குடிமக்களாக உள்ளனர். அவர்கள் தொழில் நுட்ப முறையிலான வாழ்க்கை பாணியை கொண்டுள்ளனர். அதன் மூலம் ஒன்றோடொன்று தொடர்பு ஏற்படுத்தி கொள்வதற்கும் வளர்ச்சி நிலையை அடைவதற்குமான மிகப்பெரிய வாய்ப்புகளை பெற்றுள்ளனர். நவீன



தொழில் நுட்பங்கள் மனிதனின் வரையறையே மாற்றியுள்ளது. Wi-Fi மற்றும் இணையத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் போது மட்டுமே அவன் வாழ்வதாக உணர்கிறான். மின்னிலக்க உலகில் ஒளிமிகுந்த பக்கங்கள் இருந்தாலும் அதன் இருள் நிறைந்த பகுதியை ஒரு போதும் மறந்து விட முடியாது. எதார்த்தமான தொடர்பை படிப்படியாக இழக்க செய்தல், நேரடி உறவை துண்டித்தல், சகமனிதருடைய அவலத்தை காணாமல் பார்வை இழக்க செய்தல், மெய்நிகர் உலகில் (Digital World) மூழ்கி இருப்பதன் மூலம் தங்களை மின்னிலக்க புலம் பெயர்தலுக்கு (Digital Migration) உட்படுத்துதல் போன்றவை இதன் இருள் நிறைந்த சில பகுதிகளாகும். இவை முன்னைய காலங்களைவிட இன்று நம்மை அச்சத்தில் ஆழ்த்துகிறது. இச்சூழலில் நாம் மிகவும் கவனமாக இல்லாவிட்டால் இருள் நிறைந்த பகுதி இளையோரின் ஒட்டுமொத்த வாழ்க்கையும் அணுகுமுறையையும் இருளில் மூழ்க செய்ய அதிக நேரம் எடுக்காது. புதிய கொள்கைகளின் தோற்றம் மற்றும் அடிப்படை விழுமியங்களின் இழப்புகள் ஒரு புது உலகபோக்கை உருவாக்குகின்றது. இந்த புது உலகபோக்கின் சில நுணுக்கங்களையும் இவைகளின் மத்தியில் பாதுகாப்பாக முன்னேறி செல்வதற்கான சில திறன்களையும் உங்களுக்கு அறிவுறுத்த விரும்புகிறேன். அதாவது 1. ஒழுங்கற்றநிலை - தெளிந்து தேர்தல், 2. மனச்சான்று - நற்குண மனச்சான்றுடன் செயல்படுதல், 3. செயற்கை நுண்ணறிவு - செயல்படத்தூண்டும் நுண்ணறிவு

**1. ஒழுங்கற்றநிலை - தெளிந்து தேர்தல் (Disorder Discernment)**

கடவுள் எங்கும் நிறைந்திருப்பவர். ஆனால் இன்றைய உலகில் எங்கும் நிறைந்திருப்பவர் என்ற சொற்றொடர் இறைவனை குறிக்க பயன்படுத்துவதை விட எங்கும் நிறைந்திருக்கின்றதீமையை குறிக்க பயன்படுத்தப்படுகிறது. தீமை எங்கும் வியாபித்து இருக்கிறது. இன்றைய இளையோர்களால் நன்மையை தீமையிலிருந்து வேறுபடுத்த முடியாத அளவிற்கு தீமை நன்மையில் பொதிந்து தரப்படுகிறது. இது சுவையானதாகவும், கண்களுக்கு களிப்பூட்டுவதாகவும் அறிவுபெறுவதற்கு விரும்பத்தக்கதாகவும் இருக்கிறது (தொநூ 3:6). இச்சூழலில் தெளிந்து தேர்தல் மட்டுமே நன்மை தீமையை வேறுபடுத்தி அறிவதற்கு துணைபுரியும். எனவே தான் திருப்பாடலாசிரியர் ஆண்டவரோடு வேண்டுகிறார்: "உம் ஊழியன் நான், எனக்கு நுண்ணறிவு புகட்டும்; அப்போது உம் ஒழுங்கு

முறைகளை அறிந்துக்கொள்வேன்" (திபா 119:125) மேலும் சாலமோன் அரசர் ஆண்டவரோடு இவ்வாறு மன்றாடுகிறார்: "நன்மை தீமை பகுத்தறியவும் தேவையான ஞானம் நிறைந்த உள்ளத்தை அடியேனுக்கு தந்தருளும்" (1 அர 3:9). நுண்ணறிவு என்பது நன்மை தீமையை வேறுபடுத்தி அறிவதற்கான ஆற்றல். இந்த ஆற்றலை பெற்றுக்கொண்டு புனித பவுலடியார் குறிப்பிடுவதைப்போல அனைத்தையும் சீர்தூக்கி பார்த்து நல்லதை பற்றிக்கொள்வோம் (1 தெச 5:21).

## 2. மனச்சான்று - நற்குண மனச்சான்றுடன் செயல்படுதல் (Conscience Virtuous Conscience)

வாழ்க்கை என்பது நாம் அனுதினம் தேர்வு செய்யும் தேர்வுகளின் கூட்டுத்தொகையே. நற்குணமுள்ள மனச்சான்றுடன் சரியானதை தேர்வு செய்வது நமது தனிப்பட்ட மற்றும் பணிவாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும். நற்குணமுள்ள மனச்சான்றுடனான தேர்வு நிலையான வெற்றி மற்றும் ஆனந்தத்தின் கண்கவர் உயரங்களுக்கு இட்டுச்செல்லும். இருப்பினும், மனச்சான்றின் நெறிமுறைகளிலிருந்து தேர்வு நெறிமுறைகளுக்கு நகரும் போக்கு இன்றைய இளையோரிடம் மிகவும் வலுவாக உள்ளது. எந்த சூழலிலும் நன்மை செய்து தீமையை தவிர்க்க வேண்டுமென வலியுறுத்தும் மனிதனின் உள்ளோசையே மனச்சான்று. வாய்ப்புகள் பெருகுவதால் உடனடி மகிழ்வை தருவதை நாடி நம் மனம் ஏங்குகிறது, கால்கள் ஓடுகிறது. விவிலிய மொழியில் இதனை அழிவுக்கு இட்டுச்செல்லும் அகன்றவாயில் (மத் 7:13) என்று அழைக்கிறோம். மறைந்திருக்கும் பேரழிவுகளை கருத்தில் கொள்ளாமல் மேற்கொள்ளும் கண்மூடித்தனமான மற்றும் கட்டுப்பாடற்றதேர்வு தனிப்பட்ட வாழ்க்கையில் மட்டுமல்ல, குடும்பங்கள் மற்றும் சமூகத்தில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. நற்குணமுள்ள மனச்சான்றுடன் மேற்கொள்ளும் சரியான தேர்வு வாழ்வுக்கு இட்டுச்செல்லும் இடுக்கமான வாயில் வழியாக நுழைவது போன்றதாகும். இன்று தெரிந்தோ தெரியாமலோ நற்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள செல்வந்த இளைஞன் எழுப்பிய "நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நான் என்னச் செய்ய வேண்டும்?" (லூக் 18:18) என்றகேள்வி நம் அனைவரின் மனச்சான்றுகளிலும் எதிரொலிக்கிறது. பல வேளைகளிலும் கேள்விக்கான பதில் "உங்களிடம் இன்னும் ஒன்று குறைப்படுகிறது"



(லூக் 18:22) என்பதாக அமைகிறது. நற்குணமுள்ள மனச்சான்றுடன் தேர்வுச்செய்ய தவறுவதே அந்த ஒரு குறை. நற்குணமுள்ள மனச்சான்றால் தூண்டப்பட்ட சரியான தேர்வு வலியை உள்ளடக்கியது. ஏனெனில் அவர் தன் விருப்பத்தை கடவுளுக்கு அர்ப்பணிக்க வேண்டும். கடவுளின் விருப்பத்திற்கு தன்னை அர்ப்பணித்தால் என்ன நடக்கும் என்பதை தூய பேதுருவின் வாழ்க்கை தெளிவுபடுத்துகிறது. தூய பேதுரு தனது கண்களை இயேசுவின் மேல் வைத்தார். இயலாதது என நினைத்தது. அவரால் செயல்படுத்த இயன்றது, அவரால் தண்ணீரில் நடக்க முடிந்தது. இயேசுவின் மீது பதித்த பார்வையை இழந்த நொடியில் அவர் தண்ணீரின் ஆழத்தில் மூழ்கினார். நற்குணமுள்ள மனச்சான்றைதவிர்த்து அர்த்தமுள்ள வாழ்க்கை சாத்தியமில்லை என்பதை ஒவ்வொரு இளையோரும் புரிந்துக்கொள்ள வேண்டும் என்பதே எனது பேராவல். நமது உடல் கடவுளின் ஆலயம் என்றால், மனச்சான்று அதன் அதிதூயகமாகும்.

## 3. செயற்கை நுண்ணறிவு - செயல்படத் தூண்டும் நுண்ணறிவு (Artificial Intelligent Inspirational Intelligent)

செயற்கை நுண்ணறிவை நம்மில் யாருக்கும் அறிமுகப்படுத்த வேண்டிய அவசியமில்லை. ஆனால் செயல்படத் தூண்டும் நுண்ணறிவு என்றகருத்தை அறிமுகப்படுத்த வேண்டியதன் அவசியமாக இக்காலகட்டம் திகழ்கிறது. ஊக்கமளிக்கும் நுண்ணறிவு என்பது மனிதனின் தூண்டுதல் அளிக்கும், உற்சாகப்படுத்தும், மாற்றியமைக்கும், நெகிழ்வான, நம்பிக்கை மற்றும் கற்பனை திறன் கொண்ட ஒட்டுமொத்த திறனாகும். இது மனித அறிவின் மிகவும் செல்வாக்கு மிக்க நிலை மற்றும் மக்களின் திறன்களை திறப்பதற்கான திறவுகோலாகும். ஊக்கமளிக்கும் தலைவர்களால் பிறரை உன்னத இலட்சியத்திற்கும் வெற்றியின் உயரங்களுக்கும் அழைத்துச் செல்ல இயலும். அன்பு நண்பர்களே, இயேசுவின் வாழ்வும் பணியும் உண்மையில் எக்காலத்திலும் நமக்கு ஊக்கமளிப்பதாக அமைகிறது. அத்தகைய ஒரு ஊக்கமளிக்கும் அறிவை பெற்றுக்கொள்ள இளையோர்கள் விவிலியத்திற்குள் தங்களை மூழ்கடித்துக் கொள்ள வேண்டும். தூய பிரான்சிஸ் அசிசியின் வாழ்க்கை இன்றும் ஏராளமான இளையோரை தன்னலமற்றதொண்டாற்றதங்கள் வாழ்வை அர்ப்பணிக்க தூண்டுகிறது. புனித அன்னை தெரசாவின் வாழ்க்கை சாதி சமய

வேறுபாடின்றி மக்களுக்கு உத்வேகமளித்தது. எனவே இவ்வுலகில் அமைதியாக வாழ செயல்படத் தூண்டும் நுண்ணறிவுக் கொண்டவர்கள் தேவை. ஊக்கமளிக்கும் இளம் வீரர்களாக மாறுவோம்.

இளையோர் தினத்தை அலகு தளத்தில் அர்த்தமுள்ள வகையில் கொண்டாட உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். திருஅவை அளவிலான இளையோர் தின நிகழ்வுகள் பத்தனம்திட்டை மறைமாவட்டத்தின் ஆனந்தப்பள்ளி மலங்கரை சுறியானி கத்தோலிக்க தேவாலயத்தில் வைத்து 2022 அக்டோபர் 9-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இளையோர் தினத்தில் நம் திருஅவையின் பங்குகளில் சேகரிக்கும் காணிக்கையை மறைமாவட்ட நிதிக்காப்பாளரிடம் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் உவந்தளிக்கும் காணிக்கையில் 50 சதவீதம் மறைமாவட்ட இளையோர் பணிக்குழுவிற்கும், 50 சதவீதம் திருஅவை நிலை இளையோர் பணிகளுக்காகவும் பயன்படுத்தப்படும். மறைமாவட்ட நிதிக்காப்பாளர் உயர் பேராய தலைமை செயலகத்திற்கு இத்தொகையை அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இளையோர்களின் உருவாக்கத்திற்கு துணைபுரியும் ஒவ்வொருவரையும் நான் மனதார நினைவு கூறுகிறேன். நாம் இளையோரை எதிர்கால தலைவர்களாக உருவாக்கினால் மட்டும் போதாது, அவர்களை நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உறவில் வளர்வதற்கு உதவ வேண்டும். கிறிஸ்துவின் தூது அறிவிக்கும் சீடர்களாக இளையோரை உருவாக்குவதில் ஒன்றிணைந்து செயல்படுவோம்.

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

***இவண்,***

**† மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ்**
ஆயர் மாமன்ற இளையோர் பணிக்குழு தலைவர்
மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர்

15-09-2022
காதோலிக்கேட் சென்டர்
பட்டம், திருவனந்தபுரம்.



# குருக்களின் தியானம்



இம்மாத குருக்களுக்கான தியானத்தை 06-09-2022 அன்று அருட்தந்தை மார்ட்டின் ராஜ் (Precious Blood Congregation) அவர்கள் வழிநடத்தினார்கள். தியானத்தை தொடர்ந்து நம் ஆயர் அவர்கள் ஆசியுரை வழங்கினார்கள்.

# மேரி மக்கள் துறவற சபை

## மூத்த சகோதரிகளின் கூடுகை



மேரி மக்கள் துறவற சபையின் புனித சூசையப்பர் மாகாணத்தின் மூத்த அருட்சகோதரிகளுக்கான கூடுகை 19-09-2022 அன்று மார்த்தாண்டம் தாய் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை மற்றும் மதர் அனிலா கிறிஸ்டி அவர்களும் வகுப்புகள் நடத்தினர். அருள்சகோதரி ஸ்டேன்சி அவர்கள் இக்கூடுகையை வழிநடத்தினார்கள்.

## புனித மார்த்தாவின் திருவிழா

சமையலறை உதவியாளர்களின் பாதுகாவலியாம் புனித மார்த்தாவின் திருவிழாவை முன்னிட்டு, எம்மடங்களில் பணிபுரியும் சகோதரிகளை



கௌரவித்து அவர்களின் தினமாக மார்த்தாண்டம் மாகாணத்தாய் இல்லத்தில் வைத்து நடத்தப்பட்டது

# MCYM
*Youth Apostolate*

## மறைமாவட்ட MCYM போட்டிகள்



மார்த்தாண்டம் மறைமாவட்ட அளவிலான எழுத்து மற்றும் வினாடிவினா போட்டிகளானது 02-04-2022 அன்று MJKM பள்ளி கூடத்தில் வைத்து நடைப்பெற்றது. இந்நிகழ்வுகளை இயக்குநர் தந்தை அவர்களின் தலைமையில் அருள்தந்தை வில்பிறைட் அவர்கள் ஜெபத்துடன் தொடங்கி வைத்தார்கள். எழுத்துபோட்டிகள் முடிவடைந்த பின் வினாடி வினா போட்டி நடைப்பெற்றது. இதில் 13 பங்குகள் பங்கேற்றனர். இப்போட்டியை அருள்தந்தை ஜெபின் ஜாண் அவர்கள் வழிநடத்தினார்கள் இப்போட்டியில் தேமானூர் அலகு முதல் இடமும், மாத்தார் அலகு இரண்டாம் இடமும், முக்கடல் அலகு மூன்றாம் இடமும் பெற்றார். இப்போட்டிகளில் கலந்துக் கொண்ட அனைத்து போட்டியாளர்களுக்கும் பாராட்டுகளும், வாழ்த்துக்களும்.

## மறுஒன்றிப்பு தினம் மற்றும் சபை சங்கமம்

திருவல்லா மறைமாநிலத்தில் வைத்து நடைபெற்ற மறுஒன்றிப்பு நிகழ்வுகளில் மறைமாவட்ட இளையோர் இயக்க இயக்குநர், அருட்சகோதரி ஊக்குநர், மறைமாவட்ட பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்துக்கொண்டனர்.

## செயற்குழு கூட்டம்



இம்மாத செயற்குழு கூட்டம் 18-09-2022 அன்று MCYM அலுவலகத்தில் வைத்து இயக்குநர் அருள்தந்தை அவர்களின் தலைமையில் நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் மறைமாவட்ட இளையோர் இயக்க தினம் மற்றும் மறைமாவட்ட அளவிலான விளையாட்டுப்போட்டிகள் ஆகிய நிகழ்வுகளின் ஒழுங்கமைப்புகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இளையோர்களுக்கான மாநாட்டில் பல்கலைக்கழக தேர்வில் முதலிடம் பெற்ற குளப்பாறை அலகை சார்ந்த செல்வன் ராஜேஸ் மற்றும் மாநில அளவில் நடைப்பெற்ற Washu போட்டியில் தங்க பதக்கம் வென்ற மாத்தூர்கோணம் அலகை சார்ந்த செல்வன் போன் ராஜ் அவர்களுக்கு மலங்கரை கத்தோலிக்க தந்தையும் தலைவருமாகிய மோறோன் மார் பசேலியோஸ் கர்தினால் கிளிமீஸ் அவர்கள் பரிசுகள் வழங்கினார்கள். இவ்விரு இளையோருக்கு மறைமாவட்டம் சார்பாக வாழ்த்துக்கள்.



# MCA
**Diocese of Marthandam**

## MCA கூடுகை



MCA கூட்டமானது, 31.07.2022 அன்று பேரருள் தந்தை றாபின்சன் அவர்கள் தலைமையில் குழித்துறை MCA அலுவலகத்தில் வைத்து நடைப்பெற்றது. இக் கூட்டத்தில் 21-09-2022 அன்று திருவல்லா மறைமாநிலத்தில் வைத்து நடைப்பெற்ற 92-வது மறுவொன்றிப்பு மற்றும் சபை சங்கமம் நிகழ்விலும் அதை தொடர்ந்து நடைப்பெற்ற பொதுநிலையினர் மாநாட்டிலும் கலந்து கொண்ட 42 MCA உறுப்பினர்களுக்கு MCA தேசிய தலைவர் திரு.பால்ராஜ் அவர்கள் நன்றி



கூறினார்கள். மேலும் அக்டோபர் மாதம் 9-ம் தேதி நடைப்பெறும் 'சாந்தி' பாதையாத்திரையில் அனைத்து MCA பொறுப்பாளர்களும் கலந்துக் கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

## திருமண ஆயத்தப்பயிற்சி

**அக்டோபர்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் 14, 15 ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.

# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

## இலவச புற்றுநோய் பரிசோதனை முகாம்



மிட்ஸ் எழுவோம் இயக்கம் சார்பாக மிட்ஸ் நிறுவனம் மற்றும் Sree Ram Cancer Trust இணைந்து 26.08.2022 அன்று மிட்ஸ் நிறுவனத்தில் வைத்து புற்றுநோய் கண்டறியும் முகாமினை நடத்தியது. இந்த முகாமினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் துவங்கி வைத்தார்கள். இந்த முகாமில் ஒரு மருத்துவர் மற்றும் ஐந்து செவிலியர்கள் கலந்து கொண்டு பரிசோதனை செய்தனர். இந்நிகழ்வில் TASOSS இயக்குநர் அருட்தந்தை ஆல்பர்ட் தம்பி



துரை, துணை இயக்குநர் அருட்தந்தை ஆரோக்கிய சாமி ஆகியோருடன் TASOSS, CRS நிறுவன பணியாளர்களும் கலந்து கொண்டனர். இந்த முகாமில் மொத்தம் 27 பயனாளிகள் கலந்து கொண்டனர். பரிசோதனைக்குப் பின் மருத்துவ உதவி தேவைப்பட்ட நபர்களுக்கு வழிகாட்டுதலும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

## CTWWC பயனாளிகள் சந்திப்பு



Change The Way We Care என்ற திட்டத்தில் பயன் பெற்று வரும் குழந்தைகளை பார்வையிட்டு அவர்களின் தற்போதைய நிலைமையை அறிந்து கொள்ளவும் இந்த திட்டத்தை மேலும் நல்ல முறையில் செயல்படுத்தும் நோக்குடனும், 26.08.2022 அன்று TASOSS இயக்குநர் அருட்தந்தை ஆல்பர்ட் தம்பி துரை, துணை இயக்குநர் அருட்தந்தை ஆரோக்கிய சாமி மற்றும் CRS, TASOSS பணியாளர்கள் ஒன்பது பேர் வருகை தந்து பயனாளிகளை பார்வையிட்டனர்.

## CTWWC கிராமிய நடனப் போட்டி



Change The Way We Care திட்டத்தின் வழியாக கிராமிய நடனப் போட்டி மறைமாவட்டத்தில் உள்ள பங்குகளில் வைத்து நடத்தப்பட்டது. பங்களவில் நடத்தப்பட்ட போட்டிகளில் முதல் இடம் பிடித்த குழந்தைகளுக்கான இறுதி போட்டியானது மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து 31.08.2022 அன்று நடத்தப்பட்டது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும் போட்டிகளில் கலந்து கொண்ட அனைத்து குழந்தைகளுக்கும் ஊக்கப்பரிசுகளும் வழங்கப்பட்டது.



## உதவித் திட்டங்கள்

22.09.2022 அன்று விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக களியக்காவிளை மண்டலத்தின் 13 சுய உதவி குழுக்களில் உள்ள 52 உறுப்பினர்களுக்கு ரூபாய் 26,00,000/- கடனாக வழங்கப்பட்டது.

## பிற நிகழ்வுகள்

06.09.2022 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து ஓணப் பண்டிகை கொண்டாடப்பட்டது. இதில் நடைபெற்ற அனைத்து நிகழ்வுகளிலும் மிட்ஸ் பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

14.09.2022 அன்று கோள்பிங் சார்பாக நடைக்காவு கிளஸ்டரில் வைத்து புற்றுநோய்க்கான இலவச பரிசோதனை முகாம் நடைபெற்றது. Sri Ram Cancer Trust மற்றும் மிட்ஸ் நிறுவனமும் இணைந்து நடத்திய இந்த முகாமில் 32 பயனாளிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

15.09.2022 மற்றும் 16.08.2022 ஆகிய தேதிகளில் குடும்ப வளர்ச்சி திட்ட பயனாளிகளுக்கான கிளஸ்டர் கூட்டங்கள் மார்த்தாண்டம் மற்றும் தச்சூர்கோணம் ஆலயத்தில் வைத்து நடத்தப்பட்டது. இந்த கூட்டங்களில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு வழிகாட்டுதலும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. இக்கூட்டங்களில் மொத்தம் 43 பயனாளிகள் கலந்து கொண்டனர்.

27.08.2022 அன்று தளிர்கள் உலக திட்ட மாணவர்களுக்கு MIDS Talent Test மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இத்தேர்வில் மொத்தம் 122 மாணவர்கள் கலந்து கொணடனர்.



11.09.2022 மற்றும் 12.09.2022 ஆகிய தேதிகளில் சென்னையில் நடைபெற்ற CTWWC Annual review meeting -ல் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார், ஒருங்கிணைப்பாளர் திருமதி வினிதா ராணி, அமைப்பாளர்கள் திருமதி பேபி சரோஜா, திருமதி சஜிதா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மறைவட்ட செய்திகள்

## மார்த்தாண்டம் மறைவட்டம்

மார்த்தாண்டம் மறைவட்டத்தில் திருமணமாகி பத்து ஆண்டு நிறைவுற்ற தம்பதிகளுக்கான கருத்தரங்கு 14-08-2022 அன்று வேங்கோடு பெதனி பள்ளிக்கூடத்தில் வைத்து நடைப்பெற்றது. இக்கருத்தரங்கை அருட்தந்தை சேவியர் (குழித்துறை மறைமாவட்டம்) வழி நடத்தினார்கள். அதைத் தொடர்ந்து திருப்பலியுடன் இந்நிகழ்வுகள் முடிவுற்றது.



## குலசேகரம் மறைவட்டம்

### சுருளோடு தூய அடைக்கல அன்னை திருவிழா

சுருளோடு தூய அடைக்கல அன்னை திருத்தல திருவிழா செப்டம்பர் 1-09-2022 முதல் 8-09-2022 வரை மிக சிறப்பாக நடைப்பெற்றது. முதல் நாள் அன்னையின் திருகொடி பவனி மாத்தார் பங்கில் தொடங்கி அணக்கரை, செருப்பாலூர் மற்றும் பெருவழிக்கடவு ஆகிய பங்குகளில் சென்று திருத்தலத்திற்கு கொண்டு வரப்பட்டது. இந்த நாட்களில் திருப்பலியும் அன்னையோடுள்ள பரிந்துரை ஜெபமும், சிறப்பு ஜெபமும் நடைப்பெற்றன. இறுதி நாளில் ஆடம்பர ஜெபமாலை பவனியும் நடைப் பெற்றது. திருத்தல அதிபர் பேரருட்தந்தை சதீஷ் குமார் அடிகளார் அவர்களும் அருட்சகோதரிகளும் திருத்தல பொறுப்பாளர்களும் இந்நிகழ்வுகளை முன்னின்று நடத்தினர்கள்.







## குலசேகரம் மறைவட்டம் MCYM

மறைவட்ட MCYM கூட்டமானது 18-09-2022 அன்று அணக்கரை பங்கில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்தை மறைவட்ட MCYM இயக்குநர் வழிநடத்தினார்கள். இக்கூட்டத்தில் மறைவட்ட விளையாட்டுப் போட்டிகள் அக்டோபர் மாதம் 24-ம் தேதி நடத்த வேண்டும் என்றும், கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு பங்களவில் கிறிஸ்துமஸ் பாடல் போட்டி நடத்த வேண்டும், MCYM தினம் கொண்டாட வேண்டும் என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

## MSC சிகிட்சை மையம் திறப்பு விழா



மாத்தார் பங்கு வளாகத்தில் பேரருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அவர்களின் முயற்சியில் பங்குமக்களின் உதவியோடு புதிதாக ஒரு சிகிட்சை மையம் (Clinic) MSC Clinic என்ற பெயரில் தொடங்கப் பட்டது. இந்த சிகிட்சை மையத்தை மேதகு ஆயர் அவர்கள் திறந்து வைத்து அர்ச்சித்தார். இந்த சிகிட்சை மையம் 24 மணி நேரமும் செயல்படுகிறது.








## குலசேகரம் மறைவட்டம் MCA

குலசேகர மறைவட்ட மலங்கரைக் கத்தோலிக்க இயக்கமானது (MCA) 11-09-2022 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு செருப்பாலூர் ஆலயத்தில் வைத்து குலசேகர மறைவட்ட MCA தலைவர் திரு. ஆல்பின் டைட்டஸ் தலைமையில் பேரருட்தந்தை மரிய அற்புதம் அவர்கள் தலை மையில் நடைப் பெற்றது. திரு. சில்வான்ஸ் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். இக்கூட்டத்தில் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

அக்டோபர் 3-வது ஞாயிற்றுக்கிழமைக்கு முன் அனைத்து பங்குகளிலும் புதிய பொறுப்பாளர்களை தேர்ந்தெடுத்து பெயர்பட்டியலை அக்டோபர் 30-ம் தேதி நடைபெறும் M C A கூட்டத்தில் கொண்டு வருதல்.



அக்டோபர் 30ஆம் தேதி குலசேகர மறைவட்ட புதிய MCA உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்.

இறுதியில் திருமதி. மரிய சுதா அனைவருக்கும் நன்றி கூற கூட்டம் இனிதே முடிந்தது.

## மார்த்தாண்டம் மறைமாவட்டம்
## ஏற்பளிக்கப்பட்ட பங்குப்பேரவைகளின் பெயர் பட்டியல் 2022 - '23

| | |
|---|---|
| 1. பெருவழிக்கடவு | 14. தச்சூர்கோணம் |
| 2. கிறிஸ்துராஜபுரம் | 15. பேச்சிப்பாறை |
| 3. மாத்தார் | 16. ஊரம்புவிளை |
| 4. சாரூர் | 17. கடுவாக்குழி |
| 5. கண்ணக்கோடு | 18. நடைக்காவு |
| 6. கிறிஸ்துவிளாகம் | 19. செருப்பாலூர் |
| 7. புஷ்பகிரி | 20. சேரோட்டுகோணம் |
| 8. புலியூர்சாலை | 21. சூரியகோடு |
| 9. பாத்திமாநகர் | 22. ஆதிச்சவிளாகம் |
| 10. பிலாங்காலை | 23. அணக்கரை |
| 11. மரியாகிரி | 24. கோயிக்கதோப்பு |
| 12. மாத்தூர்கோணம் | 25. முதலாறு |
| 13. முகவூர் | |



# மலங்கரை கத்தோலிக்க கல்லூரி மரியகிரி

### கணிதவியல் துறை

கணிதவியல் துறை சார்பில் ஒரு நாள் கருத்தரங்கானது 24.08.2022 அன்று லாக்டஸ் எனும் மையக்கருத்தில் நடைபெற்றது. கருத்தரங்கினை கல்லூரி முதல்வர் தம்பி தங்க குமரன் அவர்கள் துவங்கி வைத்தார்கள். சிறப்பு விருந்தினர்களாக துறையை சார்ந்த திரு. ரிவின் கிறிஸ்டல் மற்றும் முனைவர் லிற்றில் பிளவர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு விளக்கமளித்தனர்.



### ஓண திருநாள்




06.09.2022 அன்று கல்லூரியில் வைத்து ஓண திருநாள் சிறப்பாக நடத்தப்பட்டது. ஓணப்பாட்டு, திருவாதிரை, மாவேலி, அத்தப்பூக்களம் போன்ற போட்டிகள் நடத்தப்பட்டது. சிறப்பு விருந்தினராக அருட்தந்தை பெர்னார்டு அவர்கள் கலந்து கொண்டு ஓண திருநாளின் நல்வாழ்த்துக்களோடு தியாகத்தின் விழாவாகவும், அறுவடையின் விழாவாகவும் ஓணம் கொண்டாடப்படுகிறது என கூறி சிறப்புரை யாற்றினார்கள். கல்லூரியின் தாளாளர் அருட்தந்தை அருள்தாஸ் அவர்கள் துவக்கவுரையாற்றினார்கள். கல்லூரியின் நிதி காப்பாளர் அருட்தந்தை வினு இம்மானுவேல் மற்றும் முதல்வர் தம்பி தங்க குமரன் அவர்கள் முன்னிலை வகித்ததோடு ஓண திருநாளின் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்கள். விழாவின் போது போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்பட்டது. சமூக பணி துறையானது முதலிடத்தை பெற்றது.

### நுண்ணுயிரியல் துறை




நவீன மருத்துவ நோயறிதல் மற்றும் நுண்ணுயிரிகளின் புதிய போக்குகள் எனும் தலைப்பில் நுண்ணுயிரியல் துறையின் கருத்தரங்கானது 30.08.2022 அன்று நடத்தப்பட்டது. திருவனந்தபுரம் மக்கள் நல்வாழ்வு மற்றும் நோய் எதிர்ப்பு

துறை ஆராய்ச்சி நிறுவன தலைமை அதிகாரி திரு. ஜெய்சாண்ட் ஜாண்சன் உயிரிமூலக்கூறின் தன்மை குறித்தும் அதனை பயன்படுத்தும் விதம் குறித்து பேசினார். தொடர்ந்து நோய் கண்டுபிடிப்பு ஆய்வாளர்கள் ஆனந்த் நாயர் மற்றும் ஜெயகிருஷ்ணன் நவீன கருவிகளின் பயன்பாட்டை பற்றி விளக்கமளித்தார்கள். கருத்தரங்கின் ஏற்பாடுகளை நுண்ணுயிரியல் துறை செய்திருந்தது.



## இந்தி துறை

தேசிய இந்தி மொழி தினத்தை முன்னிட்டு சுங்கான் கடை ஐயப்பா கல்லூரி மற்றும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழக நாட்டு நலப்பணி திட்டமும் இணைந்து நடத்திய பேச்சு மற்றும் கட்டுரை எழுதும் போட்டிகளில் கலந்து கொண்டு முதல் மூன்று இடங்களையும் கல்லூரி மாணவர்கள் கைப்பற்றி அதிக புள்ளிகளை பெற்று முதலிடம் பெற்றனர்.



## ஆசிரியர் தின விழா

05.09.2022 அன்று கல்லூரியில் வைத்து ஆசிரியர் தினவிழா நடத்தப்பட்டது. கல்லூரியில் பணியாற்றும் பேராசிரியர்களுக்கு கல்லூரியின் தாளாளர் அருட்தந்தை அருள்தாஸ், கல்லூரியின் நிதி காப்பாளர் அருட்தந்தை வினு இம்மானுவேல் மற்றும் முதல்வர் தம்பி தங்க குமரன் ஆகியோர் நல்வாழ்த்துக்களை தெரிவித்தனர்.




## இயற்பியல் துறை

இயற்பியல் துறை சார்பில் முன்னாள் மாணவர் சங்கத்தின் கூடுகையானது 03.09.2022 அன்று நடைபெற்றது. விழாவில் 50-க்கும் மேற்பட்ட முன்னாள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# MARY MOUNT CBSE SCHOOL
## ANAKKARAI

Mary Mount CBSE School -ல் ஆசிரியர் தினம் மற்றும் ஓணம் பண்டிகை செப்டம்பர் 7, 2022 அன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது. மாவேலி மன்னனை வரவேற்கும் விதமாக பூக்கோலமிட்டு, அதனை சுற்றி ஆசிரியர்கள் திருவாதிரை நடனம் ஆடினார்கள். அதனை தொடர்ந்து மாணவ மாணவிகளின் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும், விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்பட்டது. பின்னர் அனைவருக்கும் ஓணம்சத்ய வழங்கப்பட்டு விழாவானது இனிதே முடிவடைந்தது.



## பழங்கள் தினம்

Mary Mount CBSE School -ல் பழங்களின் பயன்களை உணர்த்துவதற்காக குழந்தைகளுக்கு



பழங்கள் தினமானது ஆகஸ்ட் 25, 2022 அன்று காலை 10.00 மணியளவில் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. குழந்தைகள் பழங்களை கொண்டு பழச்சாறு, சாலட் மற்றும் பழங்களை அலங்கரித்து பார்வைக்காக வைக்கப் பட்டிருந்தது.

## HOM - SPECIAL SCHOOL FOR THE MENTALLY RETARDED

### ஓணம் விழா கொண்டாட்டம்

HOM - சிறப்புப்பள்ளியில் 07-09-2022 அன்று ஓணப்பண்டிகை சிறப்பிக்கப்பட்டது. சிறப்புப் பள்ளி தலைமை ஆசிரியர் திரு. M. டென்னிஸ் அவர்கள் அறிமுக உரையுடன் அனைவரையும் வரவேற்றார். பள்ளியின்



தாளாளர் அருட்தந்தை. இராபர்ட் அவர்கள் ஓணம் விழா சிறப்புரையாற்றினார்கள். அவர்தம் உரையில் ஓணவிழாவின் நோக்கம் மற்றும் சிறப்பம்சங்களை எடுத்துக்கூறினார். முன்னதாக சிறப்புக் குழந்தைகள், பணியாளர்கள், இணைந்து அத்தப்பூ பூக்கோலமிட்டு மகிழ்ந்தனர். தொடர்ந்து ஓணம் நடனம் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றது.

## பெதனி நவஜீவன் CBSE மேல்நிலைப்பள்ளி

### புனிதரின் பெயர்கொண்ட விழா கொண்டாட்டம்

பெதனி நவஜீவன் CBSE. மேல்நிலை பள்ளியில் ஆகஸ்ட் 22 முதல் 26 வரை ஜெர்மன் மொழியில் அறிமுக வகுப்பானது ஜெர்மனியைச் சேர்ந்த அருட்சகோதரியும் ஆசிரியருமான விக்டோரியா அவர்கள் மற்றும் அருட்தந்தை சிரில் ஆனந்த் OIC அவர்களால் நடத்தப்பட்டது. செப்டம்பர்





7-ம் தேதி ஓணப்பண்டிகை மிக சிறப்பாக எமது பள்ளியில் கொண்டாடப்பட்டது. செப்டம்பர் 5-ஆம் தேதி ஆசிரியர் தினவிழாவானது மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. மாணவர்கள் ஆசிரியர்களுக்கு



வாழ்த்துக்களும் நன்றிகளும் தெரிவித்தார்கள்.

## பெயர்விழா நல்வாழ்த்துக்கள்



அருட்தந்தை யூஜின்
அக்டோபர் 04



அருட்தந்தை சஜித் பிரான்சிஸ்
அக்டோபர் 04



அருட்தந்தை அஜீஷ் ஜோகன்
அக்டோபர் 22



அருட்தந்தை கிறிஸ்பின் குரு
அக்டோபர் 25

# St. Mary's CBSE School, Mariagiri

05.09.2022 அன்று ஓணப்பண்டிகை மற்றும் ஆசிரியர் தினவிழாவானது மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஓணப்பண்டிகையை முன்னிட்டு விளையாட்டு போட்டிகளும் கலைநிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டது. ஆசிரியர் தினவிழாவை 12-ம் வகுப்பு மாணவ மாணவிகள் முன்னின்று நடத்தினார்கள். ஆசிரியர்களுக்கு வாழ்த்துக்கள் கூறி ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. மாணவர்களின் வளர்ச்சியை மனதில் கொண்டு பெற்றோர் ஆசிரியர் கூடுகையானது 11-09-2022 அன்று நடைபெற்றது. செப்டம்பர் 14-ஆம் தேதி ஹிந்தி தின விழாவும் செப்டம்பர் 16-ஆம் தேதி மலர்கள் தினவிழாவும் மிகசிறப்பாக கொண்டாடப்பட்டு கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.



## LITTLE FLOWER CENTRAL SCHOOL PUSHPAGIRI



On 2nd September the Pushpagiri family gathered around the alter for the Holy Mass. On 2nd September the Teacher's Day was celebrated and the teachers were honored by the management. The Pushpagiri family Celebrated the Onam with different competition and delicious food. On 7th September in connection with Hindi Diwas celebration different competition were conducted.





# MAR IVANIOS CBSE SCHOOL
## BRIDGE WARD, KUZHITHURAI

மார் இவானியோஸ் CBSE. பள்ளியில் ஆசிரியர் தினவிழாவானது 05-09-2022 அன்று நடைப்பெற்றது. மாணவர்கள் ஆசிரியர்களுக்கு வாழ்த்துக்களும் நன்றிகளும் தெரிவித்து மகிழ்ந்தார்கள். 07-09-2022 அன்று ஓணப்பண்டிகையை முன்னிட்டு போட்டிகளும், கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டது.



05-09-2022 முதல் 08-09-2022 வரை கிறிஸ்துராஜா மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளியில் வைத்து நடைப்பெற்ற அறிவியல் கண்காட்சியில் மேல்நிலைப் பிரிவில் முதல் பரிசை எமது பள்ளி மாணவர்கள் பெற்று பெருமை சேர்த்தார்கள்.



சேலத்தில் நடைபெற்ற மாநில அளவிலான Shooting bass (பந்து சுடுதல் போட்டி) போட்டியில் கலந்து கொண்டு எமது பள்ளி மாணவர்கள் மூன்றாம் இடத்தைப் பெற்றனர். இதன் மூலம் 5 மாணவர்கள் தேசிய அளவிலானப் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## CHRISTURAJA MATRICULATION SCHOOL MARTHANDAM

மார்த்தாண்டம் கிறிஸ்துராஜா மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளியின் பொன்விழாவையொட்டி 'எக்ஸ்போ- ஸியன்சியா' என்ற பெயரில் மூன்று நாள் அறிவியல் கண்காட்சியானது செப்டம்பர் 2022, 5-ம் தியதி முதல் 7-ம் தியதி வரை நடைபெற்றது. இக்கண்காட்சியில் குமரிமாவட்டத்தை சார்ந்த பள்ளிகள் மற்றும் கல்லூரிகள்



கலந்துக்கொண்டன. இந்நிகழ்வின் முதல் நாளில் குமரிமாவட்ட கல்வி அதிகாரி திரு. புகழேந்தி அவர்கள் வருகை தந்து விழாவை சிறப்பித்தார்.



இரண்டாம் நாள் அறிவியல் கண்காட்சியில் திருவட்டார் மாவட்ட கல்வி அலுவலர் திரு. ராமசுப்பு அவர்களும், துணை ஆய்வாளர் திரு. சங்கரலிங்கம் அவர்களும் பங்கேற்று சிறப்பித்தனர். மூன்றாம் நாள் நிறைவு விழாவில் மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் மற்றும் மேரிமக்கள் கன்னியர் சபையின் மாகாண தலைவி அருட்சகோதரி அனிலா கிறிஸ்டி அவர்களும் கலந்துக்கொண்டு



சிறப்பித்தனர், இவ்விழாவில் அறிவியல் கண்காட்சியில் சிறப்பாக செயல்பட்ட பள்ளிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

இக்கண்காட்சியை பள்ளி மற்றும் கல்லூரியை சேர்ந்த ஏராளமான ஆசிரியர்கள் மாணவ மாணவியர், பெற்றோர் மற்றும் பொதுமக்கள் கண்டு பயன் பெற்றனர்.



# புனித எப்ரேம் ம.சி.க மேல்நிலைப்பள்ளி சூரியகோடு

பள்ளிக்கல்வித்துறை சார்பில் குழித்துறை கல்வி மாவட்ட, கொல்லங்கோடு குறுவட்டத்திற்குட்பட்ட பள்ளிகளுக்கான குடியரசுதின



மற்றும் பாரதியார் தின தடகள விளையாட்டுப் போட்டிகள் 21-09-2022 புதன் கிழமையன்று நாகர்கோவில் அண்ணா விளையாட்டு அரங்கத்தில் சூரியகோடு, புனித எப்ரேம் ம.சி.க. மேல்நிலைப்பள்ளி தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

தொடக்க விழாவிற்கு மார்த்தாண்டம் மறைமாவட்டப்பள்ளிகளின் தாளாளர் அருட்தந்தை தேவதாஸ் அடிகளார் தலைமை தாங்க, தலைமையாசிரியை அருட்சகோதரி ஆன்றோ மரியா டி.எம். அவர்கள் அனைவரையும் வரவேற்றார். குளச்சல் டி.எஸ்.பி. திரு. தங்கரமணன் அவர்கள் தேசியக்கொடியை ஏற்றி வைத்து எப்ரேம் பள்ளி மாணவர்களின்



அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு. டேவிட் டேனியல் அவர்கள் போட்டிகளைத் தொடங்கி வைத்து மாணவர்களை உற்சாக மூட்டினார். உடற்கல்வி ஆசிரியர் திரு. எட்வின் ஜோஸ் அவர்கள் நிகழ்வுகளை சிறப்பித்தவர்களுக்கு நன்றி கூறினார்.



குளச்சல் டி.எஸ்.பி. திரு. தங்கரமணன் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களைப் பாராட்டி சான்றிதழ்களும் பதக்கங்களும் வழங்கினார்.

# ஆயரின் செப்டம்பர் மாத நிகழ்வுகள்



3 ➢ சுருளோடு தூய அடைக்கல அன்னை திருத்தல திருவிழாவை முன்னிட்டு திருப்பலி நிறைவேற்றி "அன்னையின் அருளழகு" என்ற மையச் சிந்தனையில் மறையுரையாற்றி இறையாசீர் பொழிந்தார்.

4 ➢ காரியவட்டம் புனித மரியன்னை மலங்கரை கத்தோலிக்க தேவாலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

5 ➢ ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நாஞ்சில் கலைக்கல்லூரியில் நடைபெற்ற ஆசிரியர் தின நிகழ்விற்கு தலைமைத் தாங்கி சிறப்புரையாற்றினார்.



6 ➢ பாளையம் புனித மரியன்னை பசலிக்காவில் திருப்பலி நிறைவேற்றி மறையுரையாற்றி இறையாசீர் பொழிந்தார்.

7 ➢ மரியாகிரி Community கல்லூரியின் வெள்ளிவிழா ஆண்டு நிகழ்விற்கு தலைமைத்தாங்கி வாழ்த்துரை வழங்கினார்.

7 ➢ நாவல்காடு ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

8 ➢ நாலாஞ்சிறை பெதனி அனுசார துறவிகளின் மாகாண தலைவி அவர்களின் பெயர் கொண்ட விழாவை முன்னிட்டு திருப்பலி நிறைவேற்றி வாழ்த்துரை வழங்கினார்.

10 ➢ முளகுமூடு தூய மரியன்னை பசலிக்கா திருவிழாவை முன்னிட்டு திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

11 ➢ வெட்டுகுழி ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

11 ➢ கரமனை ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

13 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற குருக்களுக்கான மாதாந்திர தியானத்தில் கலந்துக்கொண்டு முன்னோக்கிய பயணத்திற்கான ஆலோசனை வழங்கினார்.

17 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற பேராலய கட்டுமான நிதி குழுவின் கூடுகைக்கு தலைமைத்தாங்கினார்.

18 ➢ கன்னியாகுமரியில் வைத்து நடைபெற்ற CBCI பெண்கள் மாநாட்டில் இறுதி நாள் திருப்பலி நிறைவேற்றி மறையுரையாற்றி இறையாசீர் பொழிந்தார்.

18 ➢ முதலார் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

19 ➢ மார்த்தாண்டம் மாகாண இல்லத்தின் முதிர்ந்த அருட்சகோதரிகளுக்கான கூடுகையில் சிறப்பு வகுப்பை வழிநடத்தினார்

20 ➢ திருவல்லாவில் வைத்து நடைபெற்ற மலங்கரை கத்தோலிக்க ஆயர்கள் மாமன்றத்தில் கலந்துக் கொண்டார்.

21 ➢ திருவல்லாவில் வைத்து நடைபெற்ற 92 வது மறுவொன்றிப்பு மற்றும் மலங்கரை சங்கம நிகழ்வுகளில் கலந்துக்கொண்டார்.

22 ➢ மார்த்தாண்டம் பேராலயத்தை சார்ந்த அருட்தந்தை விக்டர் அவர்களின் தந்தையின் இறப்பை தொடர்ந்து இல்லத்தை சந்தித்து ஆன்ம இளைப்பாற்றிக்காக ஜெபித்தார்.

25 ➢ புதிதாக கட்டி எழுப்பப்பட்ட அன்னைநகர் ஆலயத்தை அர்ச்சித்து முதல் நன்றி திருப்பலி ஒப்புக்கொடுத்து புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

27 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற மறைவட்ட முதன்மை குருக்கள், Presbyter Council, Diocesan Council போன்ற கூடுகைகளுக்கு தலைமைத் தாங்கினார்.

28 ➢ வெல்லூர்க்கோணம் ஆலயத்தின் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

30 ➢ மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவிற்கு ‘தலைமை’ தாங்கினார்.





## இம்மாதம் நினைவு கூர

அக்டோபர் 2022



1 - புனித குழந்தை தெரசாள்
2 - சிலுவைத் திருநாளுக்குப்பின் மூன்றாம் ஞாயிறு
காவல் தூதர்கள்
மலங்கரை கத்தோலிக்க இளைஞர் தினம்
3 - அரியோபாக்கஸ் மார் திவன்னாசியோஸ்
4 - புனித பிரான்சிஸ் அசிசி, மார் துமாத்தியோஸ்
5 - புனித பௌஸ்தினா
7 - ஜெபமாலைத் திருநாள்
மார் சர்க்கீசும் மார் பாக்கோசும்
9 - சிலுவைத் திருநாளுக்குப்பின் நான்காம் ஞாயிறு
குலத்தந்தையான ஆபிரகாம்
10 - பேராயர் பெனடிக்ட் மார் கிரிகோரியோஸ் ஆண்டகையின் நினைவு
இறைவாக்கினர் தானியேல்
11 - திருத்தொண்டர் மார் பிலிப்பு
திருத்தந்தை புனித 23-ாம் யோவான்
13 - மார் கார்ப்போஸ்
15 - ஆவிலாவின் புனித தெரசா
16 - சிலுவைத் திருநாளுக்குப்பின் ஐந்தாம் ஞாயிறு
18 - நற்செய்தியாளர் புனித லூக்கா
20 - இறைவாக்கினர் யோவேல்
22 - மார் ஹிலாரியோன்
திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல்
23 - சிலுவைத் திருநாளுக்குப்பின் ஆறாம் ஞாயிறு
மறைபரப்பு ஞாயிறு
அல்பேயுவின் மகன் மார் யாக்கோபு
28 - பெத்தேரி மறைமாவட்டம் நிறுவப்பட்ட நாள்
30 - கூத்தோஸ் ஈத்தோ ஞாயிறு

1

4

7

10

18

23


# 92-வது மறுவொன்றிப்பு தினம் மற்றும் சபைசங்கம விழா கொண்டாட்டங்கள்... திருவல்லா மறைமாநிலம்













# அன்னைநகர் தூய மரியன்னை மலங்கரை கத்தோலிக்க புது ஆலய அர்ச்சிப்பு

